IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
O.S.No.116/2016
DEPOSITION OF WITNESS

பி.வா.சா.1 சாட்சி சத்ய ஸ்ரீதர் த.பெ.பாலசுந்தரம்

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Principal District Munsif (FAC) on 21.04.2026 in accordance with the provisions of Act XX141.**

வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:

1. எனது மனைவி பெயரில் பிளாட் எண். 7, 8 ற்கு நான் வில்லங்கம் போட்டுதான் வாங்கினேன் என்றால் சரிதான். மேற்படி வில்லங்க சான்றிதழை தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்யவில்லை. 23.12.2005ம் ஆண்டு கிரையம் வாங்கினேன் என்றால் சரிதான். அவ்வாறு வாங்கும்போது எந்த வில்லங்கமும் இல்லை. வில்லங்கம் இல்லை என்பதால்தான் கிரையம் வாங்கினேன். எனது மனைவி செல்வமணி, கங்காதேவி ஆகியோரிடமிருந்து கிரையம் வாங்கினார் என்றால் சரிதான்.

2. எனது தரப்பில் தாக்கல் செய்திருக்கும் ஆவணங்களை பதிவு அலுவலகத்தில் இருந்து நகல் பெற்றுதான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ35, 36 ஆகிய ஆவணங்கள் ஒரே தேதியில் கிரையம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணங்களை பற்றிய விபரம் எனக்கு முதலில் தெரியவில்லை. பி.வா.சா.ஆ 35, 36 சம்பந்தமாக எனது கிரையதாரர் செல்வமணி, கங்காதேவி ஆகியோர்கள் ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளார்களா என்றால் அது பற்றி தெரியாது. அவர்கள்தான் அது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றால் அது பற்றி தெரியாது.

3. மேற்படி செல்வமணி, கங்காதேவி ஆகியோர்கள் கொடுத்த வில்லங்க சான்றிதழைதான் நான் பார்த்தேன். நானாக சார்பதிவலகத்தில் வில்லங்க சான்றிதழ் போட்டு பார்க்கவில்லை. இது சம்பந்தமாகத்தான் நான் மதுரை மாவட்ட குற்றப்பிரிவில் புகார் கொடுத்தேன். தாவா சொத்துக்கள் இருக்கும் இடத்திலும் உள்ளடக்கி நான் கம்போண்டு சுவர் கட்டியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. எந்த வருடம் கம்போண்டு சுவர் கட்டினேன் என்றால் 2003 ல் கட்டினேன். தற்போது 1 முதல் 9 வரை இருக்கும் வரிசையில் என்னுடைய மனைவி கிரையம் பெற்ற பிளாட் 7, 8 தவிர மற்ற அனைத்தும் வீடுகள் கட்டப்பட்டுவிட்டனர் என்றால் சரிதான்.

4. நான் கட்டியுள்ள காம்போண்டு சுவர் பிளாட் எண். 7, 8 தவிர மீதமுள்ள பகுதியில் மேற்குபுறமாக தொடர்ச்சியாக கட்டியுள்ளனர் என்றால் சரிதான். எனது மனைவி வாங்கின பிளாட் எண். 7, 8 காலி இடமாகத்தான் உள்ளது என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையாளர் நியமனம் செய்யப்பட்டு தாவா இடத்தை சர்வேயர் துணையுடன் அளவை செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அறிக்கை நீ.ம.சா.ஆ1, 2 ஆக குறியீடு செய்யப்பட்டதில் நீ.ம.சா.ஆ 2 சர்வேயர் வரைபடத்தில் ஆக்கரமிப்பு செய்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது, அது தவறு அதின் சர்வே எண் குறிப்பிடப்படவில்லை. நீ.ம.சா.ஆ1 ல் விரிவாக ஆணையாளரால் குறிப்பிடப்பட்டுள்ளது.

5. தாவா சொத்தில் வாதிகள் தரப்பில் ஆணையாளர் நியமனம் செய்யும் மனுவில் தாவா சொத்து மற்றும் அதனை சுற்றியும் உள்ள இடங்களை அளவை செய்து வரைபடத்துடன் அறிக்கை தாக்கல் செய்துதான் உத்தரவிடப்பட்டுள்ளது என்று சொன்னால் நீதிமன்ற

ஆணையாளர் இடத்தை பார்வையிட்டும் தகுதிவாய்ந்த சர்வேயர் உதவியுடன் கண்டறிய தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா வழக்கானது தாவா இடத்தில் நான் ஆக்கிரமிப்பு செய்துள்ளதால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

6. நீ.ம.சா.ஆ2 வரைபடத்தில் வழக்கு சொத்தில் 15 சென்டை நான் ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது. அது தவறானதாகும். மேற்படி நீதிமன்ற ஆணையரின் வரைபடத்திற்கு ஆட்சேபணை தாக்கல் செய்துள்ளேன் என்றால் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி ஆணையரின் வரைபடத்திற்கும் அறிக்கைக்கும் இதுவரை நான் ஆட்சேபணை செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் நான்தான் ஆக்கிரமிப்பு செய்து வாதிகளுக்கு எதிராக பொய்யான புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி நான் ஆக்கிரமித்த பகுதியை வாதிகள் விட்டுக்கொடுத்துவிட்டால் குற்றவியல் நடவடிக்கைகளை வாதிகளுக்கு எதிராக தொடரமாட்டேன் என்று காவல்நிலையத்தில் வைத்து வாதிகளை மிரட்டினேன் என்றால் சரியல்ல.

7. பி.வா.சா.ஆ35, 36 ஆவணங்களின் விபரங்கள் நான் கிரையம் வாங்குவதற்கு முன்பாகவே எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. மேற்படி விபரம் தெரிந்துக்கொண்டே தாவா சொத்தை ஆக்கிரமிப்பு செய்வதற்காகவும், வழக்கிற்காகவும் தெரியாது என்று மாற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிளாட் எண். 7, 8 அசல் கிரைய ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், சான்றிட்ட நகல் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி கிரைய ஆவணங்களின் அசல் என் கைவசம் உள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணங்களை பயன்படுத்தி

வங்கியில் கடன் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். எந்த ஆண்டு கடன் பெற்றேன் என்றால் ஞாபகம் இல்லை. வழக்கு நிலுவையில் இருக்கும் போதுதான் வாங்கினேன் என்றால் ஞாபகம் இல்லை. எனது மனைவி கிரையம் வாங்கிய கிரைய ஆவணத்தில் என்ன அளவுகள் குறிப்பிடப்பட்டுள்ளதோ அந்த அளவுக்கு மேலாக எனது மனைவிக்கு பாத்தியம் இல்லை என்றால் சரிதான்.

8. எனது மனைவி வாங்கிய கிரைய சொத்தை நாங்கள் அனுபவம் செய்து வருவதை யாராவது இடைஞ்சல் செய்தார்களா என்றால் வாதிகள் இடைஞ்சல் செய்தார்கள். எனது உரிமையை தக்கவைக்க காவல்துறையில் புகார் கொடுத்ததை தவிர்த்து வேறு சட்டப்படியான என்ன நடவடிக்கை எடுத்தேன் என்றால் புகார் மட்டும்தான் கொடுத்தேன். என்னுடைய செல்வாக்கை பயன்படுத்தி தாவா சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டது என்று தெரிந்தும் நான் இந்த வழக்கில் பொய்யாக எதிர்வாதம் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ35, 36 ஆகிய ஆவணங்கள் பற்றிய விபரம் தெரியும் என்றால் 2013 ல் தெரியும். வாதிகளின் பரிகாரமானது உரிமையியல் நீதிமன்றத்தால் மட்டுமே தீர்வு செய்ய இயலும் என்றால் தெரியாது. தாவா சொத்திற்கு கிழக்கு பக்கம் உள்ள பிளாட் எண்கள் 1 முதல் 9 வரை இருப்பவைகளுக்கு கிழக்குபுறம் உள்ள 25 அடி சாலைக்கு வாதிகளால் திருப்பரன்குன்றம் பேரூராட்சிக்கு பல பத்திரங்கள் மூலமாக எழுதி கொடுக்கப்பட்டிருக்கிறது என்றால் சரியல்ல. பிளாட்டிற்கு கிழக்கு பக்கம் சாலைதான் உள்ளது. பி.வா.சா.ஆ. 1 முதல் 20 வரை உள்ள ஆவணங்கள் மற்றும் பி.வா.சா.ஆ 24, 25 திருப்பரங்குன்ற பேரூராட்சிக்கு எழுதிகொடுக்கப்பட்ட தான ஆவணம் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ10, 12, 14, 15, 18, 20, 22, 24, 26, 27, 29,

ஆகிய ஆவணங்கள் மட்டுமே.

(வாதிதரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.)

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை

தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி

அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்

கையொப்பமிட்டார்.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.04.21 09:56:20 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),

திருமங்கலம்.